[1987 ஏப்ரல் 29

நல்ல யோசனை. ஆனால் அந்த யோசனையை எந்த அளவிற்கு நிறைவேற்றமுடியும் என்று உறுதிமொழி சொல்ல இயலாது. அந்த யோசனையை பல்வேறு யோசனைகளின் அடிப்படையிலே வைத்து நாம் பரிசிலிக்கலாம்.

மாநில அரசு ஊழியர்களின் ஊதிய விகிதம்.

538—(* வினா எண். 12102) திரு. கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் ஊதிய விகிதங்களை மாநில அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்குறிப்பு தற்பொழுது அரசிடம் இல்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மாநில அரசு ஊழியர்கள் தொடர்ச்சியாக நீண்டகாலமாகவே மத்திய அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கும்படியான அதே சம்பள விகிதங்களையும் மற்றவிதமான பண ரூபத்தில் இருக்கும்படியான சலுகைகளையும் கொடுக்கும்படி கேட்டு வருகிறார்கள். அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லையா? அமைச்சர் அவர்கள் இப்போது செயற் குறிப்பு அரசிடம் இல்லை என்று சொன்னார்கள். அதை இனிமேலாவது கவனத்தில் எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பொதுவாக மாநிலத்திற்கு மாநிலம் அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்கள் மாறுபட்டு உள்ளன. ஒவ்வொரு மாநில அரசும் மாநிலத்தின் நிதி நிலைமை, வேலைவாய்ப்பு அளிக்கும் தன்மை, ஊழியர்களின் எண்ணிக்கை போன்றவற்றை கருத்திலே வைத்துக்கொண்டு ஊழியர்களுக்கு ஊதிய விகிதங்களை மாநில அரசுகள் நிர்ணயித்து வருகின்றன. இந்தியாவில் 22 மாநிலங்களுடைய ஊதிய விகிதமும் ஒரே விதமாக அமையவில்லை. மத்திய அரசு ஊழியர்களின், மாநில அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்கள் ஒன்றேபோல் இருக்க வேண்டும் என்கின்ற ஒரு விதி முறையும் இல்லை. அந்த அடிப்படையிலேதான் அவரவர்கள் அந்த அந்த மாநிலத்தினுடைய

1987 ஏப்ரல் 29]

சூழ்நிலைக்கு ஏற்ப ஊதிய விகிதங்களை அமைத்துக்கொண்டு வருகிறார்கள். அந்தத் தன்மைக்கு ஏற்ப தமிழகத்திலே நம்முடைய மாநிலத்தின் நிதி வருவாய், இங்கே இருக்கின்ற ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை வைத்து நாம் ஊதியக்குழு அமைப்பதும், ஊதியக் குழு பரிந்துரையின் அடிப்படையிலே ஊதியங்களை நிர்ணயிப்பதும் ஆகிய பணிகளை ஆற்றி வருகிறோம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு மாநிலம் சில அற்ப சொற்ப வித்தியாசங்கள் இருக்கும் என்பது உண்மை. இல்லை என்று நாம் சொல்லவில்லை. ஊழியர்களுடைய இந்தக் கோரிக்கை மாநிலங்களுக்கு மாநிலம் வித்தியாசம் இருக்கிறதா என்ற அடிப்படையிலிருந்து கிளம்பவில்லை. இங்கே நமக்கு இருக்கும்படியான பொருள் விலையையும், அதை அவர்கள் வாங்கி ஜீவனம் செய்வதற்கான, வாங்கும் சக்தியும் அவர்களுக்கு இருக்க வேண்டும். அதற்காகத் தான் ஊதியம் பெறுவது. அந்த நிலைமைக்கு ஏற்ப ஊதிய விகிதங்களை, நமது அண்டை மாநிலமான கேரளா, ஆந்திரா அல்லது கர்நாடகா போன்ற மாநிலங்களை எடுத்துக்கொண்டால் தமிழகத்தில் இருக்கும்படியான ஊழியர்களுக்கு கொடுக்கும்படியான ஊதியத்தை விட உயர்ந்த ஊதிய விகிதங்கள், அதே விதமான கிரேடுகளில் உள்ளவர்களுக்கு கொடுத்துக் கொண்டு வரும்போது இங்கே இருக்கின்ற ஊழியர்களுக்கு அதை உயர்த்திக் கொடுப்பது அவசியமாகவும், தேவையாகவும் இருக்கும். மத்திய அரசாங்கம் கொடுக்கும்படியான சம்பளத்தைப் பெற்றுள்ள ஊழியர்கள் இங்கேதான் வாழ்கிறார்கள். ஒரே மார்க்கெட்டில் பொருள்களை வாங்குகிறார்கள். ஒரே மாதிரியான வீட்டு வாடகைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இது ஒரு நியாயமான அடிப்படை என்பதை அரசு அங்கீகரித்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா? கொஞ்சம் பணச் செலவை கருதாமல் ஊழியர்களின் உள்ளத்தில் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எந்த ஒரு காலத்திலேயும் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் ஊதியம் ஒரே மாதிரியாக இருந்ததில்லை.

ஒரே விகிதத்தை கடைப்பிடிப்பதும் இல்லை. ஒரே விகிதத்தை கடைப்பிடிக்கின்ற விதி முறையும் இல்லை. மகாராஷ்டிரத்தில் அரசு ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சம், 6½ இலட்சம்தான் இருக்கிறது. நம்முடைய மாநிலத்தினுடைய அரசு ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 10, 10½ இலட்சம். சில இடங்களில் 8½, 9 இலட்சம் இருக்கிறது. அந்தந்த மாநிலத்தில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒருவருக்கொருவர் வகுக்க முடியாது. அது அந்தந்த மாநிலத்தினுடைய சூழ்நிலைக்கு உட்பட்டது. அந்த ஊதியத்தினுடைய விகிதத்தை அப்பக்கத்திலே இருக்கின்ற சூழ்நிலைக்கு ஏற்ப விலைவாசி தன்மைகளுக்கு ஏற்ப உயர்த்திட வேண்டும் என்று கேட்பதிலே நியாயம் இருக்கலாம். அதை நான் மறுக்கவில்லை. இருக்கின்ற சூழ்நிலையையொட்டி அவ்வப்போது ஆராய்கின்றோம். அதற்கான தன்மைகளையும் நாம் செய்கிறோம். அதற்கான காரண காரிய விளக்கங்களையும் நாம் செய்கிறோம். அதைக் கேட்பது தவறு என்று நான் சொல்லவரவில்லை. ஆனால் இருக்கின்ற சூழ்நிலையையொட்டி, ஒரே மாதிரியாக ஆக்க இயலாது என்றுதான் நான் சொல்கின்றேனே தவிர அவ்வப்போது ஏற்படுகின்ற சூழ்நிலையையும் மற்றவற்றையும் வைத்து நாம் முடிவு செய்கின்றவர்களாக இருக்கிறோம். தனியாகத்தான் இதைக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அண்மையிலே காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்களுடைய குழுக் கூட்டத்தில் திரு. ஜோதிபாசு அவர்கள், மாநில அரசைக் கேட்காமல் மத்திய அரசு அடிக்கடி ஊதிய விகிதங்களை மாற்றி அமைத்து விடுவதால், அதைப் போல் பஞ்சப்படி போன்றவைகளை மாற்றியமைத்து விடுவதால், மாநில அரசாங்கம் சிக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறாரே, அந்தக் கருத்திற்கு நமது மாநில அரசு உடன்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்து, இந்த அரசிற்கும் உடன்பாடான கருத்துதான். இப்போதும் நாமும் அதை

1987 ஏப்ரல் 29]

வற்புறுத்தி வருகிறோம். எல்லா மாநிலங்களில்கூட—காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளுகிற மாநிலங்களில்கூட அதைப் பற்றி வருந்துகின்றன. ஏனென்றால், மாநில அரசுகளைக் கலக்காமல், மத்திய அரசு தன்னுடைய வசதி வாய்ப்புக்களை எண்ணி ஒன்றைச் செய்துவிடுகிறபோது, அதனால், அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் மற்றவைகளும் மாநில அரசுகளுக்கு ஏற்பட்டு விடுகின்றபோது, அதற்கான நிதியுதவி யாவது மத்திய அரசு தாவேண்டும். அதையும் செய்வதில்லை. ஆகவேதான், Development Council கூட்டத்திலேயும் சரி; மாநில முதலமைச்சர்கள் கலந்து கொள்கிற கூட்டங்களிலேயும் சரி; எல்லா மாநில முதலமைச்சர்களும் இந்தக் குறைபாட்டை எடுத்துச் சொல்லி, எங்களை எல்லாம் கலந்து கொண்டு, ஒரு Consensus of opinion என்ற அடிப்படையில் மத்திய அரசு செய்யுமானால் எல்லோருக்கும் சௌகரியமாக இருக்கும் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்திலே கட்சி வேறுபாடுகூட கிடையாது. நிர்வாகத்தினுடைய நன்மையைப் பொறுத்துத்தான் அமைந்து இருக்கிறது. அதையொட்டித்தான் அவர்களும் சொல்லி இருக்கிறார்கள். நாமும் பல தடவை வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

சைதை-ஆலந்தூர் சாலை அடையார் ஆற்று மையப்பகுதியில் தனியார் ஆக்கிரமிப்பு.

539—(*வினா எண். 12157) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சைதை-ஆலந்தூர் சாலை கஸ்டம்ஸ் காலனிக்கும், ஓல்டாம்ஸ் பாட்டரி கம்பெனிக்கும் நடுவிலுள்ள அடையாறு ஆற்றின் மைய பகுதிகளை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தனியார் ஆக்கிரமிப்பு எதுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.